செய்தி வெளியீடு எண்–673 நாள்–2.10.2009

# தமிழக அரசு செய்தி வெளியீடு.
# 2–10–2009

முல்லைப் பெரியார் பிரச்சினையில் புதிய அணை கட்ட மத்திய அரசு கேரள அரசுக்கு ஆய்வு செய்ய அனுமதி கொடுத்து விட்டதாக ஒரு செய்தியும் – இதனை மறுத்து மற்றொரு செய்தியும் மாறி மாறி ஏடுகளில் வெளி வந்த நிலையில் இது பற்றி ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்திற்கேற்ப அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் கேரள அரசு புதிய அணை கட்டுவதற்கு நாம் நம்முடைய எதிர்ப்பை மத்திய அரசிற்கும் தெரிவித்திருக்கிறோம். நீதி மன்றத்திலும் வழக்கு நிலுவையிலே உள்ளது. இன்று வரையில் மத்திய அரசின் சார்பாக எந்தவிதமான அதிகார பூர்வமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. இவ்வாறு மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான அதிகார பூர்வ தகவலும் இல்லாத நிலையில் சிலர் கூறுவதைப் போல உச்ச நீதி மன்றத்தில் தடை ஆணை பெற எந்தவிதத்திலும் இயலாது. மத்திய அரசின் சார்பில் அதிகார பூர்வமான உத்தரவு கேரள அரசுக்கு ஆதரவாக பிறப்பிக்கப் பட்டுள்ளது என்று யாராவது எடுத்துக்காட்டினால், தமிழக அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்.

* * * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.